DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 78/2021

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | முனியசாமி |
| Father / Husband Name | கருப்பையா |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திருச்சி பணிமனையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். 18.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு சென்னையில் இருந்து ஆட்களை ஏற்றிக்கொண்டு திருச்சிராப்பள்ளிக்கு TN 01 AN 0254 என்ற பேருந்தை ஆஜர் எதிரி ஓட்ட நான் நடத்துனராக இருந்தேன். மதுராந்தகம் ஐய்யனார் கோவில் அருகே ரோட்டில் ஒரே கூட்டமாக இருந்தது. அப்போது எங்கள் முன் சென்ற RKT Travels Bus–ன் பின் புறம் எங்கள் பஸ் மோதிவிட்டது. விபத்தில் யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. விபத்தினால் எங்கள் பேருந்தின் முன் பக்க கண்ணாடி, கிரில் ஆகியவை சேதம் அடைந்துவிட்டது. எங்களுக்கு முன் சென்ற பேருந்தின் பின் பக்கம் நசுங்கிவிட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 18.08.2017 ம் தேதி TN 01 AN 0254 தடம் எண் 123 பேருந்தில் நான் நடத்துனராகவும் எதிரி ஓட்டுநராகவும் இருந்தேன் என்றால் சரிதான். 19.08.2017 ம் தேதி அதிகாலை 12.30 மணிக்கு கற்பகவிநாயகர் மருத்துவ கல்லூரி அருகே வந்தபோது எங்கள் முன்னால் சென்ற தனியார் பேருந்தின் மீது ஆஜர் எதிரி கவனக்குறைவாக அரசு பேருந்தை இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரிதான். ஆனால் விபத்து மதுராந்தகம் ஐய்யனார் கோவில் அருகே நடந்தது. அந்த விபத்தில் தான் எங்கள் பேருந்தின் முன் பக்க கண்ணாடி உடைந்தது என்றால் சரிதான். பின்னர் 1.00 மணிக்கு மதுராந்தகம் ஐய்யனார் கோவில் சந்திப்பு அருகே எங்கள் பேருந்தின் முன்னால் சென்ற TN 22 BH 3625 என்ற மகேந்திரா டூரிஸ்ட் வேனில் ஆஜர் எதிரி கவனக்குறைவாக மோதி விபத்து ஏற்படுத்தியதில் வேன் புளியமரத்தில் மோதிவிட்டது என்றால் சரியல்ல.

3. அந்த விபத்தில் வேனில் பயணம் செய்தவர்கள் இரண்டு நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதில் ஒருவர் இறந்துவிட்டார் என்றாலும் அதை பற்றி எனக்கு

தெரியாது. மேற்சொன்ன விவரத்தை போலிசார் விசாரிக்கும்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த ஓட்டுநர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.